

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.6.2025) தஞ்சாவூர், மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரசு நலத்திட்டங்கள் குறித்த கண்காட்சி அரங்குகளையும், தஞ்சாவூரின் சிறப்புகள் தொடர்பான கண்காட்சி அரங்குகளையும் பார்வையிட்டார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.6.2025) தஞ்சாவூர், மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரசு நலத்திட்டங்கள் குறித்த கண்காட்சி அரங்குகளையும், தஞ்சாவூரின் சிறப்புகள் தொடர்பான கண்காட்சி அரங்குகளையும் பார்வையிட்டார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.6.2025) தேனி மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 3 வழித்தடங்களில் 9 சிற்றுந்துகளின் இயக்கத்தை கொடி அசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச் செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என்.இராமகிருஷ்ணன், ஆமகாராஜன், கே.எஸ். சரவணக்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், உள்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.6.2025) தேனி மாவட்டம் வீரபாண்டி அண்ணாசாலை அங்கன்வாடி மையத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை பார்வையிட்டு, உணவுப் பொருட்களின் இருப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச் செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என்.இராமகிருஷ்ணன், ஆ.மகாராஜன், கோ.சரயமாக்குமார், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுநல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா. மாவட்ட ஆட்சித்தலைவர் எஞ்ஜித்சிங், உள்பட பல்வேறு நுறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.6.2025) தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில், 2 பெண் குழந்தைகள் பெற்ற குடும்பத்திற்கு முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தலா ரூ.25,000 க்கான வைப்புத்தொகை பத்திரங்களை வழங்கினார். இந்நிகழ்வில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச் செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என்.இராமகிருஷ்ணன், ஆ.மகாராஜன், கே.எஸ்.சரவணக்குமார், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், உள்பட அரசு அலுவலர்கள். உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.6.2025) தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் 8 நபர்களுக்கு தலா 3.50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கலைஞர் கனவு இல்லத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச் செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என்.இராமகிருஷ்ணன், ஆ.மகாராஜன், கே.எஸ்.சரவணக்குமார், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், உள்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.6.2025) தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம் கீழவடகரை ஊராட்சியைச் சேர்ந்த செல்லாங்குடியிருப்பில் வசிக்கும் 46 பழங்குடியின மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா மற்றும் கலைஞர் வீடுகட்டும் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச் செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என்.இராமகிருஷ்ணன், ஆ.மகாராஜன், கே.எஸ்.சரவணக்குமார், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், உள்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

## கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!





கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய - பகுதி - பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம் 16.06.2025 அன்று நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் இக்கூட்டத்திற்கு தலைமையேற்று, புதிய நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார். இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர்கள் கே.இ.பிரகாஷ் எம்.பி., பி.எஸ்.சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் சுமன் வரவேற்புரை ஆற்றினார். இந்நிகழ்வில், சமூக வலைதளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து கழக செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா அவர்களும், சமூக வலைதளங்களை ஆக்கப்பூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து சமூக வலைதள பயிற்சியாளர் இளமாறன் அவர்களும் புதிய நிர்வாகிகளுக்கு பயிற்சி வழங்கினர்.

## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!





கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய - நகர - பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம் 15.06.2025 அன்று நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் தே.மதியழகன் இக்கூட்டத்திற்கு தலைமையேற்று, புதிய நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார். இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர்கள் கே.இ.பிரகாஷ் எம்.பி., பி.எஸ்.சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் தினேஷ் ராஜன் வரவேற்புரை ஆற்றினார். இந்நிகழ்வில், சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து கழக செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா அவர்களும், சமூக வலைதளங்களை ஆக்கப்பூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து சமூக வலைதள பயிற்சியாளர் இளமாறன் அவர்களும் புதிய நிர்வாகிகளுக்கு பயிற்சி வழங்கினர்.